கோரிக்கை அம்மா அவர்களின் அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலைவாய்ப்பைப்பற்றிப் பேசினார்கள். அவ்வாறு பேசும்பொழுது, வேறு மாநிலங்களிலிருந்து வருபவர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள் என்று கூறினார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் உள்ளூரில் இருக்கின்ற மக்களுக்குத்தான் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அதற்குப்பிறகுதான், வெளி மாநிலங்களிலிருந்து வரும் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

60—

பேருந்து வசதி

***6562—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் நகரத்திலிருந்து ஒக்கூர் வழியாக ஏம்பல் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் நகரத்திலிருந்து ஒக்கூர் வழியாக ஏம்பல் வரை ஒரு பேருந்து நாளொன்றுக்கு ஒன்பது நடைகள் இயக்கப்படுகின்றன. இந்த இயக்க நடைகளின் சராசரி பயணிகளின் அடர்வு 51 சதவீதம் ஆகும். எனவே, தற்பொழுது உள்ள பேருந்து வசதிகளே போதுமானதாக

உள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்” என்ற பாடலுக்கு இலக்கணம் வகுத்து, வங்கக் கடல் ஓரம் துயில் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவியின் நினைவாலயம் நோக்கித் தொழுது, எனது கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றொரு கோரிக்கையையும் உங்களிடம் எடுத்துரைக்கின்றேன். பெரிய பேருந்துகள் செல்ல முடியாத சின்ன, சின்ன குக்கிராமங்களுக்கு பேருந்து வசதிகளை ஏற்படுத்திடும் வகையில், ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது ஐந்து சிற்றுந்துகளையாவது, ஆங்காங்கேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் வழிகாட்டுதலோடு வழித்தடங்களை அமைத்து விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி நகர்ப்புறங்களில் சிற்றுந்துகள் உலா வருகின்றனவோ, அதேபோன்று கிராமப்புறங்களிலும் அந்தப் பசுமையான இலைகளோடு பவனி வந்தால், கிராமத்து மக்கள் மகிழ்ச்சியடைவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னையில் இருக்கக்கூடிய குறுகிய பகுதிகளுக்கெல்லாம் பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்திலே கொண்டுவந்த திட்டத்தினால், தற்போது சென்னையில் 200 சிறிய பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், 100 சிறிய பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டிருக்கின்றது. ஆக

மொத்தம் சென்னையில் மட்டும் 100 சிறிய பேருந்துகளை இயக்குவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையான, அனைத்துப் பகுதிகளிலும் சிறிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.

திரு. ஏ. இரத்தினசபாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும் என்று சொன்ன மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டையில், மாநிலத்திலேயே மிகப் பெரிய ஒரு மருத்துவக் கல்லூரியை எங்களுக்கு வழங்கிய, பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில், இந்தச் சபையில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைக்கொண்டு வந்து சேர்த்த எங்களுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாபெரும் மருத்துவக் கல்லூரியை தங்களுடைய திருக்கரத்தால் தொடங்கி வைக்க வருகை தந்த, செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் சிம்மாசனத்தில் நிரந்தர முதல்வராக வீற்றிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது இதயம் நிறைந்த மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்கி அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]